**வேலணை பிரதேச சபை**

-----------------------------------

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

--------------------------------

## 1 நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 29 மார்ச் 2018 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 11 செப்தெம்பர் 2018 இல் தவிசாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வேலணை பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டு கொள்கைகள்

நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்குப் பின்பற்றப்பட்டிருந்த கணக்கீட்டுக்கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் சபையின் பயன்பாட்டிலுள்ள ஆனால் சபைக்கு உடமையாக்கப்பட்டிருக்காத 23 வாகனங்களின் பெறுமதி கூட்டுமொத்தம் ரூபா 18,215,636 மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டமையினால் மோட்டார் வாகனங்களின் பெறுமதி ரூபா 18,215,636 ஆல் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் அதிகரித்துக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) சபையினால் நிர்மாணிக்கப்பட்டு உபயோகிக்கப்பட்டு வருகின்ற 15 மயான கட்டடங்களின் பெறுமதியானது அங்கீகரிக்கப்பட்ட விலை மதிப்பீட்டாளரினால் விலை மதிப்பிடப்பட்டு கடந்த 1 தொடக்கம் 5 ஆண்டுகளாக நிதிக் கூற்றுக்களில் கொண்டுவரப்பட்டிருக்காமையினால் கட்டடங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது.

**1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2015 ஆம் ஆண்டிலிருந்து அலுவலரொருவரிற்கு செலுத்தப்பட்டிராத சம்பளங்களும் கூலிகள் ரூபா 29,335 தொடர்பில் நீதிமன்ற தீர்ப்பு கட்டளை கிடைக்கப்பெற்றிருந்தும் அதற்கமைவாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) கூட்டுமொத்தம் ரூபா 10,810 பெறுமதியான ஊழியர் பங்களிப்பு கடந்த 12 ஆண்டுகளாக ஊழியர் பங்களிப்பு நிதியத்திற்கு அனுப்பப்பட்டிராது நானாவித வைப்பு கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது.

(iii) விதவைகள் அனாதைகள் மற்றும் தபுதாரர் நிதியத்துக்கான பங்களிப்பு கூட்டுமொத்தம் ரூபா 10,468 ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்துக்கு அனுப்பப்படாமல் கடந்த ஒன்பது ஆண்டுகளாக நானாவித வைப்புக் கணக்கில் தேக்கிவைக்கப்பட்டிருந்தது.

**1.3.4 இணங்காமைகள்**

**1.3.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிருவாக விதிகள் | | |
| | அத்தியாயம் III இன் பிரிவு 32 | | சபையினால் வீதவரி மதிப்பீடு தொடர்பாக மதிப்பீட்டுப் பதிவேடு பேணப்படாததுடன் மீளாய்வாண்டில் வீதவரி அறவீடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் | | |
| | நிதி ஒழுங்கு விதி 571 | 102,782 | மூன்று வகையான காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு சுற்று நிருபம் | | |
| (i) | 29 திசெம்பர் 2016 இன் 30/2016 ஆம் இலக்கம் | | சபையின் 27 வாகனங்களிற்கு கடந்த ஒரு வருட காலமாக எரிபொருள் நுகர்வுப் பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | 26 ஜுன் 2008 இன் 13/2008ஆம் இலக்கம். | 10 வாகனங்களின் வாகன ஓட்ட அட்டவணைகள் தொடர்ந்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னதாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | வடக்கு மாகாண நிதி சுற்றுநிருபம் 07 மார்ச் 2017 இன் PF/01/2017 ஆம் இலக்கம். | 08 உத்தியோகத்தர்களால் பிணைப் பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |

### 1.3.4.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

சபையினது பயன்பாட்டில் இருந்த 35 வாகனங்களுக்கான மீளாய்வாண்டுக்கான வருடாந்த வாகன வரி கணிப்பிடப்பட்டு செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் அதற்கு நேரொப்பான முன்னய ஆண்டின் ரூபா 11,181,818 தொகையான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 9,196,073 தொகையாக இருந்தது.

**வருமான நிர்வாகம்**

### 2.1.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரிகள் | 663,800 | – | 970,400 | – | 796,800 | – | 710,617 | – |
| வாடகைகள் | 684,900 | – | 3,150,962 | 115,271 | 1,418,200 | – | 1,385,090 | 150,183 |
| அனுமதிபத்திரக் கட்டணங்கள் | 379,000 | – | 297,480 | – | 244,900 | – | 314,470 | – |
| ஏனைய வருமானங்கள் | 8,049,790 | – | 7,444,548 | – | 6,929,250 | – | 11,811,313 | – |
| | 9,777,490 | – | 11,863,390 | 115,271 | 9,386,150 | – | 14,221,490 | 150,183 |

(ஆ) சபையினால் சோலை வரி மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படாமையால் வீதவரி வருமானங்கள் பட்டியலிடப்பட்டிருக்கவில்லை.

**2.1.2 குத்தகைக் கட்டணங்கள்**

குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த 07 ஆதனங்களுக்கான மீளாய்வாண்டிற்கான குத்தகை நிலுவை கூட்டுமொத்தம் ரூபா 89,021 அறவிடப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.1.3 முத்திரைக்கட்டணங்கள்**

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து ரூபா 2,004,750 தொகையான முத்திரைக் கட்டணங்கள் தொடர்ந்தும் பெறப்பட வேண்டியிருந்தன.

**2.2 மிகைக் கட்டணம்**

இரு அலுவலக வாகனங்களுக்கான வருடாந்த வரிப்பணம் தாமதமாகச் செலுத்தப்பட்டமைக்கு சபை நிதியிலிருந்து ரூபா 2,670 தண்டப்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இதனை சம்பந்தப்பட்ட பொறுப்பாக்கப்பட்ட உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட்டுக் கொள்ள முடியாமைக்கான காரணமும் கணக்காய்வுக்கு அறியக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச்சுகாதாரம், பொதுப்பயன்பாட்டுச்சேவைகள் மற்றும் பொதுவழிகள் மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரியின் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தலுடன் தொடர்புடையதாகவுள்ள அனைத்து விடையங்களினதும் கட்டுப்பாடு மற்றும் நிர்வாகத்தில் சபை தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு உள்ளன.

**திண்மக் கழிவு முகாமைத்துவம்**

வேலணை உப அலுவலகத்திற்கும், அல்லைப்பிட்டி உப அலுவலகத்திற்கும் உட்பட்ட பிரதேசத்தில் திண்மக்கழிவுகள் சேகரிக்கப்பட்டு அராலி திண்மக்கழிவுகள் சேகரிக்கப்படும் இடத்தில் குவிக்கப்படுகின்றதே தவிர தேசிய கொள்கைகளின்படி தரம் பிரிக்கப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்**

6,183 ஆதனங்களிற்குரிய வீதவரிகளை மதிப்பீடு செய்து அறவிடுவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் கடந்த 05 ஆண்டுகளாக சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குரிய 28 கடைகளுக்கான வாடகை ஒப்பந்தங்கள் கடந்த 05 ஆண்டுகளுக்கு மேலாக வருடாந்தம் புதுப்பிக்கப்பட்டிருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 15 மயானங்களில் உடலைத் தகனம் செய்வதற்கான அனுமதி வழங்கப்பட்டு மயான வரியினை அறவிட ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) நான்கு தொலைத் தொடர்பு கோபுரத்திற்கான கட்டட அனுமதி, வருடாந்த வரி என்பன மதிப்பிடப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வறுமை ஒழிப்பு நடவடிக்கைக்காக மீளாய்வாண்டின் வரவு செலவுத்திட்டத்தில் ரூபா 25,000 ஒதுக்கப்பட்டிருந்த போதும் அதனை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்**

-------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 22 மனித வளங்கள் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஆ) பதவி விலகிய அலுவலரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பதவியினர் கடன் நிலுவை ரூபா 35,295 கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக அறவிடப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.5 ஒப்பந்த நிர்வாகம்**

-----------------------

**முற்றாக கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்**

-------------------------------------------------

மீளாய்வாண்டில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியிருந்த 72 செயற்திட்டங்கள் சபையினால் போதியளவு வருமானங்களை பெறத்தவறியமையால் அவற்றினை செயற்படுத்தாது முற்றாக கைவிடப்பட்டிருந்தன.

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

--------------------------------------

**3.6.1 விளைவற்ற சொத்துக்கள்**

------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கூட்டுமொத்தம் ரூபா 19,174,046 பெறுமதியான உடற்பயிற்சி நிலையம், சந்தைத்தொகுதி என்பன கடந்த 1 தொடக்கம் 2 வருடங்களாக பயன்படுத்தப்படாதுள்ளன.

(ஆ) சபைக்குரிய 18 வாகனங்கள் பயன்படுத்தப்படாதுள்ளன.

(இ) குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்திருக்க வேண்டிய சந்தைகள், கடைகள் உள்ளிட்ட சபைக்குரித்தான 13 ஆதனங்கள் நாளதுவரை குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாதுள்ளது.

(ஈ) சபைக்குரித்தான 06 கடைகள் கடந்த 01 தொடக்கம் 05 ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாத நிலையிலுள்ளன.

**3.6.2 வருடாந்த பொருள் மெய்மையாய்வு**

--------------------------------------------

சபையின் ஐந்து உப அலுவலகங்கள் மற்றும் நூலகங்களின் பொருள் மெய்மையாய்வின் போது 113 பொருட்கள் குறைவாகவும் 06 பொருட்கள் மிகையாகவும் இருந்தமை அவதானிக்கப்பட்டுள்ளது. அவை தொடர்பாக வடக்கு மாகாண நிதி விதி இலக்கம் 365 இன் பிரகாரம் நாளது வரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6.3 கையளிக்கப்படாத சொத்துக்கள்**

--------------------------------------

சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் 12 வாகனங்கள் சபைக்கு உரித்தற்றனவாகக் காணப்பட்டன.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே ரூபா 81,520 தொடக்கம் ரூபா 2,466,062 அல்லது 21 சதவீதம் தொடக்கம் 360 சதவீதம் வரையான வேறுபாடுகளும் மதிப்பீட்டு செலவினம், உள்ளபடியான செலவினம் என்பவற்றுக்கிடையே ரூபா 3,220 தொடக்கம் ரூபா 9,477,509 அல்லது 11 சதவீதம் தொடக்கம் 25 சதவீதம் வரையான வேறுபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

**4.2 பெறுகை**

**4.2.1 பெறுகைத்திட்டம்**

சபையினால் மீளாய்வாண்டுக்கான பெறுகைத்திட்டம் 2006 ஆம் ஆண்டு பெறுகை கைந்நூலின் பிரிவு 4.2 இன் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2.2 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக்கூட்டம்**

சபையின் செயற்பாடுகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு ஆகக் குறைந்தது நான்கு கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் இரு கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்களே நடாத்தப்பட்டிருந்தன.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| **முறைமைகள்** | **குறைபாடுகள்** |
|---|---|
| கணக்கீடு | இழப்பீட்டுப்பதிவேடு, அளவுத்தாள் பதிவேடு மற்றும் காணி விற்பனைப் பதிவேடு என்பன பராமரிக்கத் தவறியமை. |